



செய்தி வெளியீடு எண்.56/2018 நாள் 05.10.2018

**பாதாள சாக்கடையை மனிதர்கள் இறங்காமல் பந்து கடத்தும் முறையில் சுத்தம் செய்யும் பணி. மத்திய அரசின் நடுவர் முன் செயல் முறை விளக்கம் !**

மத்திய அரசின் வீட்டு வளர்ச்சி மற்றும் நகர்புற விவகாரங்கள்துறை அமைச்சகம்பாதாள சாக்கடையை மனிதர்கள் இறங்காமல் சுத்தம் செய்வதை ஒட்டி ‘‘தொழில் நுட்ப சவால்’’என்ற போட்டியினை அம்ரூத் திட்டத்தின் கீழ் அறிவித்திருந்தது. இந்த போட்டியில் சென்னை குடிநீர் வாரியம் கழிவுநீர் குழாய்களை பந்து கடத்தும் முறையில் இயந்திரங்களின் மூலமாக எளிய முறையில் சுத்தம் செய்வது குறித்தகருத்துவுடன் போட்டியில் பங்கேற்றது.

சென்னை குடிநீர் வாரியம் அளித்த கருத்துருவை ஏற்றுக் கொண்ட மத்திய அரசின் வீட்டு வளர்ச்சி மற்றும் நகர்புற விவகாரங்கள் அமைச்சகம்மத்திய பொது சுகாதார மற்றும் சுற்றுசூழல் அமைப்பின் நடுவர் குழு உறுப்பினரை சென்னைக்கு அனுப்பி வைத்தது. இந்த உறுப்பினருக்கு சென்னை குடிநீர் வாரியம் பாதாள சாக்கடை குழாயினை இயந்திரங்கள் மூலம் ஆட்கள் இறங்காமல் சுத்தம் செய்வது எப்படி என்பதை அண்ணா நகர் ஏஎச் பிளாக்கில் கள

செயல் முறை மூலம் விளக்கம் அளித்தது. இந்த செயல் முறை விளக்கம் சென்னைக் குடிநீர் வாரிய செயல் இயக்குநர் டாக்டர் த.பிரபு சங்கர், இ.ஆ.ப., சென்னைக் குடிநீர் வாரிய தலைமைப் பொறியாளர் திரு. ஆர். சிவசண்முகம் ஆகியோர் முன்னிலையில் சென்னைக் குடிநீர் வாரிய ஊழியர்கள் மேற்கொண்டனர். இந்த செயல் முறை விளக்கத்தினை மத்திய அரசின் தொழில் நுட்ப அலுவலர் திரு. சதீஷ் குமார் மிகவும் பாராட்டி இந்த செயல் முறையை ஆவண படமாக தயாரித்து டெல்லிக்கு எடுத்து சென்றுள்ளார். மேலும் திரு. சதீஷ் குமார் இந்த செயல் முறை விளக்கம் மற்ற போட்டியாளர்களின் ஆவணங்களுடன் பரிசீலினை செய்யப்பட்டு இதற்கான முடிவு விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்